JUSTICE MORAL Newsletter
WWW.JMMEDIA.LK
17 NOVEMBER 2025 | EDITION 02

# ஜே.எம் மீடியா கல்லூரி மாணவர்களின் பிரியாவிடை

PHOTOGRAPHY 12TH BATCH FAIRWELL PARTY

மேலும்...

PHOTOGRAPHY & VIDEOGRAPHY 12TH BATCH பிரியாவிடை நிகழ்வு மிக விமர்சையாக நடைபெற்றது.

2025 அக்டோபர் 11 ஆம் திகதி ஜே.எம் மீடியா கல்லூரியின் Photography & Videography 12 ஆவது குழு மாணவர்களால் கல்லூரி வளாகத்தில் அவர்களது பிரியாவிடை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.




இதில் விரிவுரையாளர்கள், ஊழியர்கள் உட்பட மாணவர்களும் கலந்து கொண்டனர்.

விரிவுரையாளர்களால் மாணவர்களின் எதிர்கால வெற்றிக்கு வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டதோடு மாணவர்கள் தங்கள் பயணத்தின் நினைவுகளை பகிர்ந்து கொண்டனர்.

இப்பிரியாவிடை நிகழ்வு கேக் Cutting உடன் நிறைவுக்கு வந்தது.

**”ஜே.எம் மீடியா கல்லூரியில் கற்ற அனுபவம் எங்கள் வாழ்க்கையின் புதிய பாதையை திறந்தது.” என மாணவர்கள் தெரிவித்தனர்.**
**நிகழ்வின் முடிவில் அனைவரும் இனிய நினைவுகளை எடுத்துச் சென்றனர்.**

# “ஒரு நல்ல ஆசிரியர்”

## JM- CARES சமூக விழிப்புணர்வு நிகழ்வு

2025 அக்டோபர் மாதம் 06 ஆம் திகதி JM MEDIA நிறுவனத்தின் சமூகப் பொறுப்புணர்வு திட்டமான JM Cares சார்பில், ZOOM ஆன்லைன் தளத்தின் மூலம் ”ஒரு நல்ல ஆசிரியர்” என்ற தலைப்பில் சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் பூகொடை குமாரிமுல்ல முஸ்லிம் மஹா வித்தியாலயத்தின் Deputy principal Fathima Raeesa சிறப்புரை வழங்கினார்.




80 க்கும் மேற்பட்டோர் பல்வேறு இடங்களில் இருந்து இந்நிகழ்வில் இணைந்து பயனடைந்தனர்.

JM CARES சமூகபொறுப்பின் அடிப்படையில், இத்தகைய சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ந்தும் இலவசமாக நடத்தப்படும்.

## Achieve More இலவச ஊடக செயலமர்வு

இலங்கை JM Media கல்லூரியினால் பாடசாலைகளில் நடாத்தப்பட்டு வரும் இலவச ஊடக செயலமர்வு Achieve More 2025 அக்டோபர் மாதம் 14 ஆம் திகதி குருணாகல் பானகமுவ அந்நூர் மத்திய மஹா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் தலைமையிலும் JM Media Production & College இன் தலைவரும் ஊடகவியலாளருமான சட்டமாணி Raashid Malhardeen இன் வழிகாட்டலிலும் சிறப்பாக நடைபெற்றது.

இச்செயலமர்வில் மீடியா பற்றிய அறிமுகம் மற்றும் செய்தி பற்றிய தெளிவான விளக்கம் சட்டமாணி Raashid Malhardeen ஆல் வழங்கப்பட்டதோடு புகைப்படக்கலை பற்றிய விளக்கம் Raza Malhardeen ஆல் வழங்கப்பட்டது. இதற்கான செயல்முறைகளும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் கலந்து பயன்பெற்ற அனைத்து மாணவர்களுக்கும் பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்பட்டதோடு பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் செயலமர்வு தொடர்பாக கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.



# ஜே.எம் மீடியா தயாரிப்பு நிறுவனத்தின் சேவைகள்

மேலும்...

**முன்பள்ளிகளின் இல்ல விளையாட்டுப்போட்டி. பரிசளிப்பு விழா மற்றும் பாடசாலை நிகழ்வுகள்**

## ATHEENA முன்பள்ளியின் இல்ல விளையாட்டுப் போட்டி

2025 அக்டோபர் மாதம் 02 ஆம் திகதி மாவனல்லை ATHEENA முன்பள்ளியின் இல்ல விளையாட்டுப் போட்டி நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஜே.எம் மீடியா நிறுவனம் Media Partner ஆக இணைந்ததோடு அதற்கு Photography, Announcing, Podium மற்றும் Sound போன்ற சேவைகள் ஜே.எம் மீடியா தயாரிப்பு குழுவினரால் மேற்கொள்ளப்பட்டது.

எமது அனைத்து சேவைகள் குறித்தும் ATHEENA முன்பள்ளி தலைமை ஆசிரியர் எமக்கு கருத்துக்களை தெரிவித்துக் கொண்டார்.

## AL- AKEEL MMV பாடசாலையின் கட்டட திறப்பு விழா.

2025 அக்டோபர் மாதம் 11 ஆம் திகதி Kotiyakumbura Al - Akeel MMV தின் மூன்று மாடிக்கட்டட திறப்பு விழா மிக விமர்சையாக நடைபெற்றது.

அதற்கு Photography, Facebook live மற்றும் LED Wall போன்ற சேவைகள் ஜே.எம் மீடியா தயாரிப்பு குழுவினரால் மேற்கொள்ளப்பட்டது.

எமது தடங்கள் அற்ற சிறந்த சேவை குறித்து AL AKEEL பாடசாலை அதிபர் மற்றும் ஏனையோர் எமக்கு நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்தனர்.








## INDIAN COLLECTION ஆன்லைன் வியாபார விளம்பரம்

வாடிக்கையாளர்களின் தேவைக்கு ஏற்பவும் அவர்களின் Budget இற்கு ஏற்பவும் எப்போதும் சிறப்பான சேவையை வழங்கும் ஜே.எம் மீடியா தயாரிப்பு குழுவினர் Indian Collection எனும் பெயரில் இயங்கி வரக்கூடிய ஆன்லைன் வியாபாரத்திற்கான விளம்பரம் ஒன்றை அவர்கள் கேட்ட வகையில் சரியான நேரத்தில் மிகவும் சிறப்பாக தயாரித்து கையளித்தோம்.

## BRILLIANT KIDS முன்பள்ளியின் இல்ல விளையாட்டுப் போட்டி



2025 அக்டோபர் மாதம் 11 ஆம் திகதி மாவனல்லை நாகூர்கம Brilliant Kids முன்பள்ளியின் இல்ல விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. அதில் ஜே.எம் மீடியா நிறுவனம் MEDIA PARTNER ஆக இணைந்தடே-தாடு அதற்கு Photography மற்றும் Sound ஜே.எம் மீடியா தயாரிப்பு குழுவினரால் மேற்கொள்ளப்பட்டது.

எமது சேவைகள் குறித்து Brilliant Kids முன்பள்ளி தலைமை ஆசிரியர் மிகவும் மகிழ்ச்சி அடைந்ததாக அவரின் கருத்துக்கள் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தன.

எமது அந்த விளம்பரம் குறித்து அந்த நிறுவனம் அழகான முறையில் நன்றி தெரிவித்ததோடு அது போன்ற இன்னும் விளம்பரங்கள் செய்ய எண்ணி இருப்பதாகவும் அதையும் ஜே.எம் மீடியா தயாரிப்பு குழுவினருக்கே தர இருப்பதாகவும் அந்நிறுவனத்தின் கருத்துக்களில் தெரிவிக்கப்பட்டிருந்தன.

## KIDS PARK நிறுவனத்தின் பரிசளிப்பு விழா

2025 அக்டோபர் மாதம் 23 ஆம் திகதி மாவனல்லை Kids Park நிறுவனத்தின் Kekulu Sithuvili சித்திர போட்டியின் பரிசளிப்பு விழா Kids Park நிறுவன வளாகத்தில் நடைபெற்றது. அதில் Photography மற்றும் Facebook live போன்ற சேவைகள் ஜே.எம் மீடியா தயாரிப்பு குழுவினரால் மேற்கொள்ளப்பட்டது.

எப்பொழுதும் தரமான சேவைகளை வழங்கக்கூடிய நாம் Kids Park நிறுவனத்தின் விழாவிலும் தரமான சேவைகளை வழங்கியதாக அந்நிறுவனத்தின் கருத்துக்களில் தெரிவிக்கப்பட்டிருந்தன.



FUTURE VOICE சிறுவர் விழா 2025 சிறப்பாக நடைபெற்றது.

சிறுவர்கள் சரியான வழிநடத்தலால் சிறந்த ஆளுமையாக உருவாக வேண்டும் என்ற உயர்ந்த நோக்குடன், Future Voice என்ற பயிற்சிநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது.

# FUTURE VOICE
# சிறுவர் விழா- 2025

இதன் ஒரு பகுதியாக சிறுவர் தினத்தை முன்னிட்டு 2025 அக்டோபர் 03 ஆம் திகதி சிறுவர் விழா மாவனல்லையில் உள்ள Befit Sports Complex இல் நடைபெற்றது.

இவ்விழா, தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளரும், JM Media நிறுவனத்தின் Chairman & CEO சட்டமாணி Raashid Malhardeen இன் தலைமையில் நடைபெற்றது.

Kandy Bake House & Bombay Sweets, Befit மற்றும் JM Media Production Pro ஆகியவை இந்த நிகழ்ச்சியின் பெருமை மிக்க பங்குதாரர்களாக இணைந்தனர்.

சிறுவர்கள் விளையாட்டுக்களில் ஆர்வமாக ஈடுபட்டதோடு நிகழ்ச்சியின் நிறைவில் அவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

FUTURE VOICE சார்பில் இது போன்ற சிறுவர் நிகழ்ச்சிகள் எதிர்காலத்திலும் நடத்தப்படும்.

SCAN HERE

இந்தப் பயிற்சி நெறியின் மூலம் எதிர்கால குரல்களை செம்மை படுத்தி, இளைய தலைமுறையை சிறந்த தலைமுறையாக மாற்றும் பணியில் தன்னை அர்ப்பணித்து கொண்டுள்ளார். தொலைகாட்சி செய்தி வாசிப்பாளரும், JM Media நிறுவனத்தின் Chaiman & CEO சட்டமாணி Raashid Malhardeen.













